SRI K. SATTANATHA KARAYALAR : சார், இந்தப் பால் சப்ளை யூனியனை விஸ்தரிக்க அவர்கள் சர்க்காரிடம் ஏதாவது உதவி கோரியுள்ளார்களா ? அதன்பேரில் என்ன முடிவு எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனிக்கேள்வி வேண்டும்.

SRI A. VEDARATHNAM : இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வினியோகம் செய்யப்படும் பால் "டோண்டு" மில்க்கா ? அப்படியானால், இந்தப் பாலில் தண்ணீர் கலந்து கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் பாலில் தண்ணீர் கலப்பது சட்ட விரோதமில்லையா ? இவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பிட்ட யூனியனைப் பற்றி நான் சொன்னேன். "டஸ் நாட் ரி கண்டிஷன் தி மில்க்" என்று தான் சொன்னேன். "டோண்டு" மில்க் அல்ல.

Siddha system of medicine

*948 *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf of SRI M. D. THIAGARAJA PILLAI) : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சித்த வைத்திய அபிவிருத்திக்கு அனுகுணமாக என்னென்ன மூலிகைகள் எங்கெங்கு பயிர் செய்யலாம் என்ற விவரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒரு உத்தியோகஸ்தர் சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிறாரா ?

(ஆ) அந்த அறிக்கையின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசம்?

(இ) அந்த அறிக்கை மேஜையின் பேரில் (சபைமுன்) வைக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

SRI A. VEDARATHNAM : இந்த சித்த வைத்திய முறையினுடைய வளர்ச்சி தடைப்பட்டு ஏறக்குறைய 800 ஆண்டுகள் ஆகின்றன. அதனுடைய அபிவிருத்திக்கான ஆராய்ச்சியைப் பற்றி அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ? அதன் விபரம் என்ன ?

THE HON SRI M. A. MANICKAVELU : இந்த வைத்திய முறையைப் பற்றிய ஆராய்ச்சி ஜாம்நகர் என்ற நகரில் நடக்கிறது. அதோடு சென்னையிலும் இன்டெக்ரேட் காலேஜ் ஆப் மெடிஸனில் சித்த வைத்தியத்தைப் பற்றிய ஆராய்ச்சி நடந்து வருகிறது. அதற்கு ஒரு பெரிய மெடிசினல் பார்ம் இருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : இந்த மூலிகைகளை ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு தனி உத்தியோகஸ்தரைப் போட்டிருப்பதாக கனம் உள்நாட்டு அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் இப்பொழுது இல்லையென்று சொல்லுகிறார்கள். அந்தத் தனி உத்தியோகஸ்தரின் வேலை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தனி உத்தியோகஸ்தர் இந்த இலாகாவில் இல்லையென்று சொன்னேன். அப்படி தனி உத்தியோகஸ்தர் இல்லாவிட்டாலும் அந்தக் காலேஜ் சூப்பிரின்டெண்ட் இது பற்றி விசாரித்து ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த சித்த வைத்திய மூலிகைகளைத் தயாரிக்க ஒவ்வொரு கோவில் தேவஸ்தானங்களுக்கும், மடாலயங்களுக்கும் சொந்தமான நிலங்களில் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்று எடுத்து அவைகளை தேவஸ்தான டிரஸ்டிகளிடமும், நிர்வாக அதிகாரிகளிடமும் ஒப்படைத்து அந்த மூலிகைகளைத் தயாரிக்க சர்க்கார் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

23rd March 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : சில தேவஸ்தானங்களில் இந்த மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற தேவஸ்தானங்களில் இந்த மாதிரி செய்வது அந்தந்த தர்மகார்த்தாக்களின ஆவத்தை யொட்டி இருக்கிறது.

SRI K. VINAYAKAM : Sir, what are the special herbs that are grown in this Farm maintained by the College of Integrated Medicine? Is it not a fact that the money spent upon this Farm which does not have many herbs, is not commensurate with the yield that is got from that Farm?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, this should not be gauged by the return in money. We must look into the purposes that it serves. Even though it may work at a loss, still, we should have some important medicinal plants. With that view, it is maintained.

Drinking-water supply to Tiruchirappalli

* 949 *Q*.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state the probable date when the supply of drinking water by the Municipality at Tiruchirappalli will attain normalcy?

THE HON. SRI M. A. MANICKAVELU : The supply of drinking water in Tiruchirappalli will become normal by the end of 1963 when the scheme of improvements to the distribution system sanctioned is completed.

SRI S. LAZAR : 1963-ம் வருஷத்திற்குள்ளாக நல்ல தண்ணீர் சப்ளை செய்ய என்ன திட்டம் இடப்பட்டிருக்கிறது. அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : Outline proposals for improvements to the distribution system estimated to cost Rs. 28·91 lakhs have been administratively approved by the Government. Equitable distribution of the available supply will be effected when these improvements are taken up and completed. That is the first stage of improvement in the water-supply scheme.

SRI S. LAZAR : இப்பொழுது அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய தண்ணீரைப் பிரித்துக்கொடுப்பது சம்பந்தமாகச் சொன்னார்கள். வரக்கூடிய தண்ணீர் போதவில்லை என்ற முறையில் அதை அதிகப்படுத்த என்ன திட்டம்—என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : At present, there is mal-distribution of supply due to the inadequacy of the existing distribution system. Now, when the distribution system is set right, it is expected that there will be equitable distribution of water.

Teaching staff in Government Medical Colleges

* 950 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal for upgrading the pay scales of the teaching staff of the Government Medical Colleges in the State; and

(*b*) if so, the details thereof?